## பாடம் நான்கு



# ஏன் இயேசு மரித்தார்?

மேலே உங்கள் பெயரை எழுதி கொடுக்கப்பட்ட காலி இடங்களில் வேதாகம வசன குறிப்புகளை நிரப்பவும்.

## அவர் கடவுளின் திட்டத்தின் பங்காக மரித்தார்

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் நமக்குச் சொல்வது யாதெனில் இயேசுவின் மரணம் ஏதோ பயங்கரமான தவறல்ல, மாறாக அது கடவுளுடைய திட்டத்தில் ஒரு நோக்கத்தின் பங்காகும். கடவுள் மனிதர்களின் துன்மார்க்கத்திலிருந்தும், பாவத்திலிருந்தும் திரும்பும் மனிதர்களுக்கு ஒரு மன்னிப்பின் வழியை ஏற்படுத்தியிருக்கிறார். ஆச்சரியவிதமாக, இயேசுவை சிலுவையிலறைந்தவர்கள் தங்களுக்குக் கூட மன்னிப்பு உண்டு என்பதைக் கண்டுகொள்வார்கள். அவர்களுடைய பயங்கரமான குற்றம் கூட அவர்களது பாவம் மன்னிக்கப்படுவதற்கு ஒரு வழியாக ஏற்படுத்தப்படக்கூடும். இந்தப் பாடத்தின் பிற்பகுதியில், எப்படி இயேசுவின் மரணம் மன்னிப்பைச் சாத்தியமாக்குகிறது என பார்ப்போம்.



ஒரு திட்டத்தின்படி செயல்படுதல்

### இயேசு கொல்லப்பட வேண்டுமென்பதை கடவுள் முன் குறித்துவிட்டார்.

இயேசு மரிக்கவேண்டுமென்பதை கடவுள் முன்னமே தீர்மானித்துவிட்டார் பார்க்கவும் அப்போஸ்தலர் 2:23.

கடவுள் சர்வ ஏகாதிபத்தியர்

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

### கடவுள் மனிதனின் வெறுப்பைத் தன்னுடைய தெய்வீகத்திட்டத்தில் பயன்படுத்தினார்.

கடவுள் ஒருபோதும் இயேசுவை வெறுக்கவேண்டுமென்று மனிதர்களை உண்டாக்கவில்லை, மாறாக அவர் மனிதனிலுள்ள பகைமையைத் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தினார் இயேசுவின் பரிபூரணமான வாழ்க்கை, மற்றவர்களது பரிபூரணமின்மையை மிகவும் வெளிப்படையாகத் தெரியும்படி செய்தார். எனவே அவர்கள் இயேசுவை வெறுத்தார்கள், அவருடைய ஒளியினால் தங்களது பாவம் வெளிப்படுத்தப்படுவதைத் தவிர்க்க, அவரைக் கொலை செய்வதை விரும்பி தேர்ந்தெடுத்தார்கள். இயேசு இருண்ட உலகத்திற்கு ஒளியாக விளங்கினார். மனிதர்கள் அந்த ஒளியை அணைக்க முயன்றார்கள், தங்களுடைய பாவத்தின் இருளையோ மேன்மையென்று தெரிந்தெடுத்தார்கள். பார்க்கவும் யோவான் 3:19.



இயேசு ஒரு பெரிய வெளிச்சம்

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

வரலாற்றுக் குறிப்பு : சிலுவையிலறைதல் ஒருமெதுவான, வேதனை நிறைந்த மரணம். பாதிக்கப்பட்டவனின் கரங்கள் மற்றும் கால்கள் சிலுவையோடு ஆணிகளால் அடிக்கப்பட்டிருக்கும். இயேசு சிலுவையிலறையப்படும் முன்பு மிகவும் மோசமாக சாட்டையால் அடிக்கப்பட்டார்.

### கடவுள் தன்னுடைய தெய்வீகத்திட்டத்தில் மனிதனுடைய பொறாமையைப் பயன்படுத்தினார்.

அநேக மக்கள் இயேசுவை வெறுத்தபோதிலும், அங்கு அந்த அநேகரைத் தவிர மற்ற மக்கள் அவரிடமாய் ஈர்க்கப்பட்டனர். அவருடைய புகழைக்கண்டு ஆட்சியாளர்கள் அவர்மீது பொறாமை கொண்டனர், இதுவே அவர்மீது வெறுப்பு கொள்ள மற்றொருகாரணமாயிற்று.[1] ரோம ஆளுநர் இயேசுவின் மீது அவர்கள் பொறாமை கொண்டதை அறிந்து அவரை விடுவிக்க விரும்பினான். படிக்கவும் மத்தேயு 27:17-18. வசனம் 18 ஐ எழுதவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

[1] இயேசு ஏன் வெறுக்கப்பட்டார் என்பதற்கு அங்கே வேறு பல காரணங்கள் இருந்தன. பார்க்கவும் யோவான் 5:18, லூக்கா 19:45-48.

இயேசுவின் மரணம் ஒரு விபத்து அல்ல, அது முடிவுமல்ல. கடவுள் சாத்தியமானதை நிறைவேற்ற மனிதர்களைத் தீமையான காரியங்களைச் செய்ய அனுமதித்தார். புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இப்படியாக விவரிப்பதைப் பின்வரும் பகுதிகளில் காண்போம்.



தண்டனை

# பாவத்தின் தண்டனையாக அவர் மரித்தார்

கடவுள் நீதியுள்ளவர். எப்படி ஒரு உலகப்பிரகாரமான நீதிபதி குற்றத்தை அசட்டை செய்யமுடியாதோ, அப்படியே கடவுளும் நாம் செய்யும் கெட்ட காரியங்களை அசட்டை செய்யமுடியாது. எனவே பாவமானது தண்டிக்கப்படவேண்டும், பாவத்திற்கான கடவுளின் தண்டனை மரணமே[2]. ஆனால் இயேசுவின் பரிபூரணம் அவரை ஒரு பரிபூரணமான நீதிபதியாக ஆக்குவதோடு அவரை ஒரு பரிபூரணமான பதிலாளியாகவும் ஆக்கியது. அவரிடத்தில் ஒரு பாவமுமில்லை, ஆகவே அவரால் மற்றவர்களின் பாவத்தையும் தண்டனையையும் சுமக்க முடிந்தது.

## இயேசு விசுவாசிக்குப் பதிலாக பாடுபட்டார்

நீதியும், பரிசுத்தமுமான இயேசு, அநீதியானவர்களை கடவுளிடம் கொண்டுவரவே பாடுபட்டார். பார்க்கவும் 1 பேதுரு 3:18.

நீதியற்றவருக்காக நீதியுள்ளவர்

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

## உலகம் உண்டாவதற்கு முன் இயேசு தாம் இருந்ததாக அறிக்கையிட்டார்

கடவுளின் சட்டத்தைக் கடைபிடிக்க தவறினவன், கடவுளின் சாபத்தை வரவழைக்கிறான். இயேசு இந்த சாபத்தை ஒவ்வொரு விசுவாசிக்கும் பதிலாக தாமே சுமந்துகொண்டார். பார்க்கவும் கலாத்தியர் 3:13..

அவர் ஒரு சாபத்தைச் சுமந்தார்

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

## இயேசு கடவுளின் ஆட்டுக்குட்டி

இயேசு உலகிற்கு வருவத்திற்கு முன்பு ஆட்டுக்குட்டிகளும் மற்ற மிருகங்களும் பலியிடப்பட்டு வந்தன. பாவமானது சடங்காச்சாரமாக அவைகளின்மேல் சுமத்தப்பட்டு, அவைகள் கொல்லப்படும். மற்றவர்களின் இடத்தில் அவைகள் மரிக்கும் - அதாவது குற்றம் செய்தவர்களுக்குப் பதிலாக குற்றமில்லாதவர் மரிப்பர். இதன் அடிப்படையிலேயே இயேசுவும் செய்தார். இயேசு தேவாட்டுக்குட்டி என்றழைக்கப்பட்டார். ஏனென்றால் அவர் ஒரு ஆட்டுக்குட்டியைப்போல் மற்றவர்களுக்குப் பதிலாக மரித்தார். மிருகங்கள் மனித பாவத்தை எடுத்துப்போட முடியாது, ஆனால் இயேசுவின் மரணம் ஒரே தரம் முற்றிலுமாக பாவத்தை நீக்கி விடுகிறது[3]. பார்க்கவும் யோவான் 1:29.



ஆட்டுக்குட்டிகள் பலியிடப்பட்டன

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

யூத பஸ்காவில் ஆட்டுக்குட்டிகள் பலியிடப்படும். இந்தப் பண்டிகை ஆட்டுக்குட்டியின் இரத்தம் பூசப்பட்ட ஒவ்வொரு இல்லத்தின் தலை மகனையும் காத்த (அழிக்காமல் கடந்து சென்ற) நாளை நினைவு கூறுதலாக கொண்டாடப்படுவதாகும். ஆட்டுக்குட்டி தலை மகனுக்குப் பதிலாக மரித்தது. இயேசு பஸ்கா ஆட்டுக்குட்டியாக ஒவ்வொரு விசுவாசிக்கும் பதிலாக மரித்தார்[4].

[2] ரோமர் 6:23
[3] எபிரேயர் 10:11-12
[4] 1 கொரிந்தியர் 5:7

# விசுவாசிகளைக் கடவுளோடு ஒப்புரவாக்கவே அவர் மரித்தார்



கடவுளுக்கு எதிரான பகைமை

புதிய ஏற்பாட்டின் போதனைகள் தெளிவானது - பாவம் தூய்மையான கடவுளைக் கோபப்படுத்துகிறது, எனவே மனிதன் இப்பொழுது கடவுளின் விரோதி. ஆனால் இயேசு விசுவாசிகளுக்குப் பதிலாக மரித்து, கடவுளோடு அவர்களை ஒப்புரவாக்கினார்.[5] அவர்கள் இனி கடவுளின் விரோதியல்ல ஏனென்றால் அவர்களின் பாவங்கள் கிறிஸ்துவுக்குள் தண்டிக்கப்பட்டு நீக்கப்பட்டது.

### இயேசுவின் மரணம் ஒப்புரவாக்குகிறது

இப்பொழுது விசுவாசிகள் கடவுளோடு ஒன்றுபடுத்தப்பட்டு இருப்பதால் அவர்கள் மகிழ்ச்சி அடையலாம். வாசிக்கவும் ரோமர் 5:10-11 வசனம் 11 ஐ எழுதவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

### தண்டனை எதுவும் மீந்ததில்லை

கடவுளுடன் நண்பர்கள்

விசுவாசிகளுக்கு இனிமேல் தண்டனை இல்லை. கடவுள் இப்பொழுது நம்முடைய நண்பர். நியாயத்தீர்ப்புநாளில் நாம் பயப்பட தேவையில்லை. பார்க்கவும் ரோமர் 8:1.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

உண்மையான விசுவாசிகள் மட்டுமே கடவுளோடு ஒப்புரவாக்கப்பட முடியும். விசுவாசிப்பதன் பொருள் என்ன என்பதைப் பற்றி 6 - ம் பாடத்தில் நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

### ஒப்புரவாக்குதலின் விலை



ஒரு மீட்பின் விலை!

விசுவாசிகளை கடவுளோடு ஒப்புரவாக்க இயேசு அதிக விலை கொடுக்க வேண்டியதாயிற்று. நம்மிடத்தில், அவரது மரணம் “அநேகரை மீட்கும் கிரயமாயிற்று” என்றார்.[6] மீட்கும் விலையானது ஒரு பணத்தொகையாக யாரோ ஒருவரைத் திரும்பப்பெறக் கொடுப்பதாகும். குழந்தைகளை கடத்துபவர்கள் மீட்கும் விலையை பயமுறுத்திக் கேட்பதுண்டு. இயேசு தமது உயிரை பாவிகளுக்குப் பதிலாக மீட்கும் விலையாகக் கொடுத்து அவர்களை கடவுளிடம் திரும்பக் கொடுத்தார். நாம் இனிமேல் நமக்கு சொந்தமானவர்களல்ல, ஏனெனில் இயேசு நம்மை வாங்கியிருக்கிறார். நாம் இப்பொழுது அவருக்காகவே வாழவேண்டும்.
பார்க்கவும் 1 பேது. 1:18-19.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

# விசுவாசிகளுக்கு மோட்சத்தைத் திறக்கவே அவர் மரித்தார்



பரலோகம் பலவகைப்பட்ட இனங்களால் அமைந்தது.

ஒவ்வொரு தேசத்திலிருந்தும் விசுவாசிகள் மோட்சத்திலிருப்பார்கள். புதிய ஏற்பாடு மோட்சத்தை கடவுளும், அவருடைய தூதர்களும் வாழும் பரிசுத்தமான இடம் என்கிறது. அசுத்தமான அல்லது பாவமான யாதொன்றும் அதில் ஒருபோதும் பிரவேசிக்க முடியாது.[7] விசுவாசிகள் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டது கிறிஸ்துவின் மரணத்தின்மூலமும், அவர்களது பாவங்கள் நீக்கப்பட்டதின் மூலமாகவும்தான். இப்பொழுது அவர்கள் மரிக்கும்போது பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க அவர்களுக்கு எதுவும் தடை செய்ய முடியாது.

[5] கொலோசேயர் 1:20
[6] மாற்கு 10:45
[7] வெளிப்படுத்தின விசேஷம் 22:15

## ஆயத்தம் பண்ணப்பட்ட இடம்

உயர்ந்த ஆயத்தம்

இயேசு அடிக்கடி மோட்சத்தைப்பற்றி பேசினார், தம் சீடர்களிடம் அவர் சொன்னது, “நான் முன்னே போய் உங்களுக்காகவும் எல்லா விசுவாசிகளுக்காகவும் ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணப்போகிறேன்”.[8] பார்க்கவும் யோவான் 14:2.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

## நீடித்து நிற்கக்கூடிய உடைமை



நாம் தக்கவைத்துக்கொள்ள முடியாத ஒன்றுடன் ஏன் ஒட்டிக்கொள்ள வேண்டும்?

உலகத்திலுள்ள எல்லாப்பொருள்களும் துருப்பிடித்து அல்லது மறைந்துபோய்விடும், ஆனால் பரலோகம் எப்பொழுதும் நீடித்து நிற்கும். கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும் இந்த அழியாத உடைமையை ஒவ்வொரு விசுவாசிக்கும் பெற்றுத்தந்திருக்கிறது. படிக்கவும் 1 பேதுரு 1:3-4. வசனம். 4 ஐ எழுதவும்.

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

# முடிவாக

இயேசு கடவுளின் உண்மையான குமாரனாக இருந்தால் ( முந்தைய பாடங்களைப் பார்க்கவும் ), இப்படி அவர் கொடூரமாய் மரிக்கும் மரணம் மிக முக்கியமானது, மேலும் இதற்கு விளக்கம் தேவைப்படுகிறது. உண்மையில் கடவுள் தாமே நமக்கு ஒரு விளக்கத்தைக் கொடுக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்க வேண்டும்.



ஆணிகளல்ல, அன்பே இயேசுவை தாங்கியது.

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் நமக்கு கடவுளுடைய விளக்கத்தைக் கொடுப்பதாக உரிமைகொண்டாடுகிறார்கள். இந்தப்பாடம் அவர்களுடைய குறிப்பேடாக இயேசு எப்படி மரித்தார் என்பதாகும். நாம் அவர்கள் அவரது வாழ்க்கையைப்பற்றி ஒரு நேர்மையான பதிவாக நமக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்வோமேயானால், அவருடைய மரணத்தின் நோக்கத்தைப் பற்றி அவர்கள் என்ன கூறுகிறார்களோ, அதற்கு நாம் திறந்த மனதுடையவர்களாக இருக்க வேண்டும்.

இயேசுவின் மரணத்தை குறித்து மிகவும் அச்சுறுத்தும் காரியம் ஏதோ ஒன்று இருக்கிறது. சிலுவையில் தொங்கியவராக அவர் உரத்த சத்தமிட்டு கூறியது, “என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்”.[9] இந்தக் கதறலின் மிகவும் தெளிவான விளக்கமானது கடவுள் இயேசுவை மற்றவர்களுடைய பாவங்களுக்காகத் தண்டிக்கிறார் என்பதே.[10]

இயேசு தாமாக மனமுவந்து சதிகாரர்களான நம்மைப்போன்றவர்களுக்காகப் பாடுபட்டார். யாருமே அவருடைய உயிரை அவரிடமிருந்து எடுத்துக்கொள்ளவில்லை.[11] பரலோகத்தின் நித்தியமான வருடங்கள் கூட அவருக்குக் கொடுக்க வேண்டிய எல்லா துதியையும் தொழுதலையும் கொடுக்க மிகவும் குறைந்ததாகவே இருக்கும். இப்படிப்பட்ட திகைக்கச் செய்யும் அன்பு மிகவும் கட்டாயப்படுத்துகிறதாய் இருக்கிறது. அது நமது வாழ்க்கையை, நமது ஆத்துமாவை, நமது எல்லாவற்றையும் உரிமையாகக் கேட்கிறது.

---

[8] யோவான் 17:20 மற்றும் 24ஐ ஆலோசிக்கவும்

[9] மத்தேயு 27:46

[10] இயேசுவின் மரணத்தை முதல் இரத்தசாட்சியான ஸ்தேவானின் மரணத்தின் வெற்றியோடு ஒப்பிடு. அதில் என்ன வித்தியாசத்தை கணக்கிடலாம்? (அப்போஸ்தலர் 6:15 மற்றும் 7:55, 56).

[11] யோவான் 10:18